1962-ஆம் ஆண்டு வரை அன்றைய வட ஆற்காடு மாவட்டம் போளூர் மற்றும் துரிஞ்சாபுரம் தொகுதிகளிலிருந்து, முறையே, இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்காலத்தில் வருவாய்த் துறை அமைச்சராகவும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகவும், செயலாற்றியுள்ளார். மேலும், 1962 முதல் 1964 வரை மாநிலங்கள் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி உள்ளார். 1964-ஆம் ஆண்டு மாநில சட்டமன்றத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் 1970-ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவைத் தலைவராக அனைவரும் போற்றத்தக்க வகையில் அரும்பணியாற்றியுள்ளார். அன்னாரது மறைவு குறித்து, அவரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும், பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன். மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

19—

அரசு விதைப்பண்ணை அமைத்தல்

***255—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெள்ளக்கோவில் தொகுதியில் அரசு விதைப் பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

1996 ஜூலை 26]

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பெரியார் மாவட்டத்திலே தென்பகுதியிலேகூட, விதைப் பண்ணை இல்லையென்பதால், வெள்ளக்கோவில் தொகுதியில் பாய்ந்து வரும் அமராவதி ஆற்றையொட்டிய, மாவட்டத்தினுடைய தென்பகுதி விவசாயிகளுக்கு பயன்படக் கூடிய அளவிலே அரசு விதைப் பண்ணை அமைக்கும் ஆலோசனை உள்ளதா, செயற்குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பவானி, சத்தியமங்கலம் பகுதியில் 107.92 ஏக்கரில் 60 மெட்ரிக் டன் நெல் விதையும் 5 மெட்ரிக் டன் சிறு தானிய விதையும் உற்பத்தி செய்கின்ற அளவுக்கு அந்தப் பண்ணை இருக்கிறது. மேற்கொண்டு புதிதாக அமைக்கத் தேவையில்லை என்று அரசு தற்போது கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நெல்லிக்குப்பம் அ. மணி.

திரு. நெல்லிக்குப்பம் அ. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் தொகுதியில் வான்பாக்கம் என்ற இடத்தில் விதைப்பண்ணை அரசு மூலமாக நடத்தப்பட்டு வந்தது. அது இந்த ஐந்தாண்டுக்காலமாக நடத்தப்படாமல் நிலங்களை ஆக்கிரமித்துள்ளனர். ஆக்கிரமித்துள்ள நிலங்களை மீண்டும் அரசுடைமையாக்கி விதைப்பண்ணை நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது விவரம் இல்லை. அவர் எழுப்பிய அந்தக் கேள்வியைப் பயன்படுத்தி இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. மனோகரன்.

திரு. கு. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதை விற்பனை டெப்போக்களில் அதிகாரிகளுக்கு அதிகமாக கமிஷன் கொடுக்கும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் தரம் தாழ்ந்த

விதைகளை வாங்கி, மீண்டும் அதே விதைகளை விவசாயிகளுக்கு பயிரிடுவதற்குக் கொடுக்கிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு விளைச்சல் பாதிக்கப்படுகிறது. இந்த முறையை மாற்றி அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்த வீரிய விதைகளை விவசாயிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டம் வெள்ளக்கோவில் மற்றும் மூலனூர் ஒன்றியங்களில் முருங்கை சாகுபடி அதிகமாக நடைபெறுகிறது. அது தொடர்பான விதைப் பண்ணையை அங்கே அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அரசு விதைப் பண்ணைகள் எத்தனை இருக்கின்றன? அவை நல்ல நிலையில் செயல்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 39 அரசு விதைப் பண்ணைகள் உள்ளன. இதில் சாகுபடி செய்யக்கூடிய பரப்பு 2,737.75 ஏக்கர் ஆகும். அரசு விதைப் பண்ணைகளில் ஆதார விதைகள் உற்பத்தி செய்வதை முக்கிய பணியாக கொண்டு, ஆண்டுதோறும் 800 மெட்ரிக் டன் நெல்லும் 15 மெட்ரிக் டன் சிறு தானிய ஆதார விதையும் உற்பத்தி செய்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, டாக்டர் காஞ்சனா கமலநாதன், திரு. இரா. பெர்னார்டு மற்றும் திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.